**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6**

**<u>பத்திரிகைச் செய்தி</u>**

**2018–2019**ம் ஆண்டிற்கான முதுகலை பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை–**1** காலிப் பணியிடங்களுக்கான நேரடி நியமன பணித் தெரிவிற்கு **2144** காலிப் பணியிடங்கள் நிரப்புவதற்கு அறிவிக்கை வெளியிடப்பட்டு **27.09.2019, 28.09.2019** மற்றும் **29.09.2019** ஆகிய **3** தினங்கள் கணினி வழித்தேர்வு நடைபெற்றது. காலிப்பணியிட எண்ணிக்கையின் அடிப்படையில் எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்ற பணிநாடுநர்கள் 1:2 என்ற விகிதத்தில் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் அழைக்கப்பட்டு சான்றிதழ் சரிபார்ப்பு பணி **11** மாவட்டங்களில் **15** பாடங்களுக்கு **08.11.2019** மற்றும் **09.11.2019** ஆகிய நாட்களில் இணையவழியில் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு தற்காலிக தெரிவு சார்ந்த விவரம் தற்போது முதற்கட்டமாக **12** பாடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் **www.trb.tn.nic.in** வெளியிடப்பட்டுள்ளது.

நாள் : 20.11.2019 தலைவர்